தனிப்பிரதி 1 அணா ஆண்டு சந்தா ரூ. 5. REGD. NO. M. 4455.

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்
C. N. அண்ணாதுரை M. A.,

"ஆய்ந்துபார் நெஞ்சமே அமைதிதான் சிறப்பா?
அண்டைவீட்டைப் பறிக்கும் சண்டைதான் சிறப்பா?"
[கவி பாரதி தாசன்]

மலர் 1 | காஞ்சிபுரம் 19—7—42 சித்திரபானு—ஆடி 4—ஞாயிறு | இதழ் 20

## அந்தராத்மாவே அவருக்குக்கூற்று!

[ பரதன் ]

உங்கள் கட்சியின் கொள்கை என்ன?

நீங்கள் அதுபற்றித் தெரிந்துகொண்டதைக் கூறுங்கள். பிறகு நான் மற்றதைக் கூறுகிறேன்.

ஜாதி இல்லை, மதம் இல்லை, அது இல்லை, இது இல்லை என்கிறீர்களாம்.

ஆமாம்! மனிதனை மனிதன் அடிமைகொள்ளும் ஜாதி கூடாது, மக்களைச் சுரண்டும் மதம் உதவாது, அது இது என்று கற்பனைகள் கூறுகிறார்களே அவை கூடாது. மாதர் விடுதலை, தாழ்த்தப்பட்டார் விடுதலை, முதலியன வேண்டும். இது எமது சுயமரியாதைக் கட்சியின் கொள்கை.

ஓகோ! ரொம்பச்சரி! உங்கள் கட்சியிலே பார்ப்பனர் இருக்கின்றனரோ?

கிடையாது, கிடையாது!

சரி! அப்படியானால், உங்கள் கட்சி உருப்படாது.

ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

பார்ப்பனர் இருந்தால்தான், கட்சியைப் பலப்படுத்தி வெற்றிகரமாக நடத்திச்செல்வார்கள்.

அப்படியா? அவர்கள் இல்லாமலே நாங்கள் வெற்றி அடைய முடியும். இன்றில்லாவிட்டால் நாளை நடக்கட்டும். பார்ப்பனர் உதவிகொண்டு வெற்றி தேவையில்லை. வெற்றிபெற நாங்களே போதும்.

அப்படி எண்ணிவிடாதீர். வெற்றிபெறும் ஜாடை தெரிந்தாலும் போதும், எங்கள் குலத்தவர் அந்தச் சமயத்திலே உங்கள் கட்சியிலே தோன்றி, அவர்கள் புகுந்ததாலேயே வெற்றி கிடைத்தது என்று மக்கள் கருதும்படிச் செய்வார்கள். பந்து, கோல் (Goal) வருகிறசமயம்பார்த்து, பார்ப்பனர் புகுவார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு தோழர் வ. வே. சு. ஐயர் அவர்களுக்கும், தோழர் K. A. P. விசுவநாதம் அவர்களுக்கும் இதுபோன்ற சம்பாஷணை நடந்ததாம். தோழர் வ. வே. சு. ஐயர் குறிப்பிட்டகாலம் இது தானோ? இதனால்தானோ, ஆச்சாரியார், பிரிவினைத்திட்டத்தை ஆதரிப்பதாக இப்போது முன்வருகிறார், என்று எண்ணுகிறேன், கலங்குகிறேன், என்று தோழர் விசுவநாதம், கோயில்பட்டி, விருதுநகர், ஆகிய இடங்களில் பேசுகையில் கூறினதாகக் கேள்விப்பட்டேன். என்னை அந்தப்பேச்சு தூக்கிவாரிப் போட்டுவிட்டது, ஏனெனில் நானும் எதற்காக ஆச்சாரியார் திடீரென, தமது தீட்சணிய எதிர்ப்பைவிட்டு, தீப்பொறி வீசுவதை நிறுத்திக்கொண்டு, பிரிவினை கோருபவர்களைப் பித்தர், பேயர், என்று தூற்றியதைவிட்டு, தழுவிக்கொண்டு, உச்சிமோர வருகிறார், காரணம் என்ன, என்று யோசித்ததுண்டு. இப்போது நானும் எண்ணுகிறேன், வ. வே. சு. கூறினதுபோல், வெற்றி பிரிவினைக்காரருக்கு ஏற்படப்போகிறது என்பது தெரிந்துவிட்டதால், சமயத்திலே சரசமாடுவோம், சந்தன தாம்பூலாதி சோட சோபசாரமும், தட்சணையும் கிடைக்கும் என்று எண்ணிக்கொண்டுதான் ஆச்சாரியார் வருகிறார்போலும், என்று எண்ணுகிறேன்: உங்கள் கருத்து என்ன? சுருக்கமாக 'திராவிடநாடு' பத்திரிகைக்கு எழுதி அனுப்புங்கள்.

பரிதாபம்! சந்தன தாம்பூலம் சாமரம் கிடைக்குமென்று கருதினார்: மதுரையிலே மல்யுத்தம், பம்பாயிலே தார்பூச்சு, வேலூரிலே கருப்புமாலை, கருப்புக் கொடி, கருப்புத் துணியால் மூடப்பட்ட எலுமிச்சம் பழம், கல்மண், இவ்வளவுமாம்!

**"மஞ்சள் கருப்பாச்சுதே. மரிக்கொழுந்து வேப்பாச்சுதே"** என்று புலம்புவரே சாவித்ரி, நாடகத்திலே, அதைப்போல், கல்கி முதலாய கனபாடிஏடுகள் கதறுகின்றன. நான் என்னசெய்வது, நீயுமா இன்னமும் ஆச்சாரியாரை எதிர்ப்பது? அவர்தான் உங்கள்பக்கம் வருகிறாரே என்றோர் காங்கிரஸ்தோழர் கண்களில் நீர்புரளக் கேட்கிறார், கடுங்கோபங் கொள்கிறார். ஆசாரியார், காங்கிரசைவிட்டு விலகியது போதாது, அவரது போர் நோக்கம் தெரியவேண்டும், பிறகே அவரிடம் நான் நம்பிக்கைகொள்ள முடியும். "அங்கேதான் ஆசை" என்று அவர் இன்றும் கூறுகிறார், தெரியுமோ **"எங்கே இருந்தாலும் என் துரை, சாமிக்கு என்மீதில் பட்சம், இருக்கு**

மடி, போடி!" — தலைவன் வேறோர் தையலைத் தேடிச்சென்றான் என்று கூறிய தோழிக்குத் தலைவி சொன்னளாம், இங்கிதத்தை. காங்கிரஸ் தேவியும், ஆச்சாரியாரைப்பற்றி, இப்படித்தான் கூறும்போலும்! அவர் எங்கே இருந்தாலும், என்னை மறந்தவர்போல் காணப்பட்டாலும், அவருக்கு ஆசை என்னிடந்தான், என்று காங்கிரஸ் கருதுமென்றே நான் நம்புகிறேன். ஏனென்பீர்கள். ஆச்சாரியாரின் பேச்சைக்கேளுங்கள். **"நான் காங்கிரசை விட்டுப்பிரிந்தாலும், என் ஆசை எல்லாம் அங்கேதான் இருக்கிறது"** என்று கூறுகிறார் நாடகத்திலே பாடுவார்களே, "ஆசையும் நேசமும் ஆனந்தமும் அங்கே.........பேசலும் பிதற்றலும், பிறவும் இங்கே........" என்று, அதைப்போலில்லையா, ஆச்சாரியார் பேச்சு! ஆசை அங்கேயாம், அவர் இங்கேயாம், அது என்னதிலே? ஆணுமல்ல பெண்ணுமல்ல, அலியென்றாலோ கோபிப்பேன் என்ற மொழிபோலிருக்கிறதே, தோழர்களே. காங்கிரசைவிட்டுப் பிரிந்தவருக்கு, ஏதோ விட்ட குறை தொட்டகுறை போலிருக்கிறதோ என்னும் இவரது பேச்சைத்தள்ளி விடுவதற்கில்லை. ஏனெனில், **"நான் காங்கிரஸ் என்ற வண்டியிலிருந்து கீழே இறங்கியது, உளைச் சேற்றிலே அகப்பட்டுக்கொண்டிருக்கும் அந்த வண்டியை சேற்றிலிருந்து வெளியே இழுத்து விடுவதற்காகத்தான்"** என்றும்கூறுகிறார். எனவேஅவர், காங்கிரசைத் தலைமுழுகிவிட்டார் என்று சொல்ல முடியுமா!

**இருந்து முகந்திருத்தி, ஈரோடு பேன் வாங்கி, விருந்து வந்ததென்று விளம்பினர் ஆச்சாரியார், ஆனல் காங்கிரசென்னும் அடங்காப்பிடாரியோ, ஆடினள், ஆடிப்பழ**.......................பாட்டைப்பூராவும் பிரசுரித்தால், பக்தகோடிகளின் கண்கள் குளமாகும், பாபம்! அதற்குப்பிறகும், ஆச்சாரியார் "என் ஆசை அங்கேதான்" என்று கூறுவது அர்த்தமுள்ளதா, அடுக்குமா அறிவுக்குப்பொருந்துமா, நீங்களே கூறுங்கள் பார்ப்போம். ஏன் இன்னமும் அவருக்கு இந்தச் சபலம் இருக்கவேண்டுமோ எனக்குத்தெரியவில்லையே. ஆச்சாரியார், இத்தகைய துறவுக்கோலம் பூண்டது மூன்றும் முறை: முதலிலே குருகுலப்போராட்டம், காங்கிரசில் பார்ப்பனீயம் இருப்பதை எதிர்த்து பெரியார், கலியாணசுந்தரனர், டாக்டர் வரதராஜுலு நாயுடு ஆகிய மூவரும் முரசுகொட்டியபோது, ஆச்சாரியார், காவியுடுத்திக் கமண்டலமெடுத்து, காங்கிரசைவிட்டு வெளியேறினர். இரண்டாவதாக, திருச்சியிலே, தேவருக்கு எதிரிடையாக, டாக்டர் ராஜன் வேலைசெய்து தேவர் தோற்கச் செய்தபோது, "டாக்டர் ராஜனு இப்படிக் காங்கிரஸ் கட்டளையை மீறி நடப்பது" என்று கேட்டு, கைகளைப் பிசைந்துக்கொண்டு, மற்றோர்முறை மரஉரி தரித்தார். கோவலனைக் கொன்றது தவறு என்பதை உணர்ந்து பாண்டியன், 'யானே கள்வள், கெடுக என் ஆயுள்" என்று கூறி வீழ்ந்தானமே உயிரற்று, அதுபோல், "இனி எனக்கென்ன காங்கிரசிலே வேலை" என்று கூறி, வெளியே போனர். இது மூன்றும் முறை! முன் இரண்டு முறையும், துறவுக்கோலம் கலைக்கப்பட்டதுபோல், இம்முறையும் நடந்தால் யார் ஆச்சரியப்பட முடியும், என்று கேட்கிறேன். அதற்கு வழிசெய்வதே, ஆச்சாரியாரின் பேச்சின் மர்மமும்.

வைதீகக்கலியாணத்திலே கண்டிருப்பீர்கள். தெருக்கோடிவரையிலே மாப்பிள்ளைபோவான் காசியாத்திரை போவதாகக் கூறிக்கொண்டு! பெண்வீட்டார் போய், அவனை அழைத்து, ஓர் கன்னிகையைத்தானம் செய்கிறோம், வருக, என்று அழைப்பர். மாப்பிள்ளை திரும்புவார். அதைப்போல், "நான் காங்கிரசை விட்டுப்போகிறேன்" என்று ஆச்சாரியார் நடிக்கிறார், என்றே நான் நம்புகிறேன். அவரது எதிர்கால நடவடிக்கை என்னை ஏமாளியாகவோ, பொய்யனாகவோ, ஆக்கும் என்று ஆச்சாரியாரின் அன்பர்கள் கருதுவர், சிலர் கூறுவர், பார்ப்போம் என்று நான் பட்டவர்த்தனமாகக் கூறுகிறேன். நான் கூறுவதே உண்மை என்பதை எதிர்காலம் நிச்சயம் நிரூபிக்கும்.

ஏசுநாதர் சிலுவையிலே அறையப்படவில்லையா! நபிகள் நாயகம் கல்லால் அடிக்கப்படவில்லையா! சிசுபாலன் கண்ணனைக் கண்டபடி திட்டவில்லையா! அதுபோல் ராஜாஜிக்கு வசை கிடைக்கிறது! ஆனல் தாரை ஊற்றி உண்மையை மறைக்கமுடியுமா? என்று கல்கி கேட்கிறது. ஆஹா! தம்பி! இந்தப்புத்தி கொஞ்சநாட்களுக்குமுந்தி வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். பெரியார், சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கி, தமிழகத்தின் தனிக்குரலாக இருந்து சமர் தொடுத்தபோது, காந்தியர்கள் செய்த சேட்டைகள் இவ்வளவு அவ்வளவு என்று அளவிடமுடியுமா! எவ்வளவு விஷமம்! எத்துணை காலித்தனம்! கல்அடியும் சொல்லடியும் எவ்வளவு! இவ்வளவு நடந்தபோது, இன்று ஆச்சாரியாருக்கு நடக்கும் அலங்கோலங்களைக் கண்டு அழும் அம்மாமிப்பத்திரிகைகள், ஒருவார்த்தை, தங்கள் சீடர்களுக்கு ஒரு நல்லுபதேசம், ஒரு எச்சரிக்கை விட்டது உண்டா? மக்கள் ஆத்திரமடைந்தனர், ஈ. வே. ராவின் பேச்சு பிடிக்கவில்லை, என்று எழுதி காலித்தனத்தைத் தூண்டினரே, அதை மறக்கமுடியுமா! விதைத்தது வினை, தினை [illegible] தம்பி! படுகுழிவெட்டி அதைப்பச்சிலையால் மூடிவைத்தால், சிலசமயம் வெட்டினவனே கண்ணைமறந்து தடுமாறிக்குழியிலே வீழ்வதுண்டு. அதைப்போல், அன்று ஆதரித்து வளர்த்த காலித்தனம், வளர்த்த கடா, மார்பிலே பாய்கிறது. வம்பைவிதைத்துப் பின்னர் கம்பு கேட்டுப்பயன் என்ன? என்று கசியும் கண்களுடன் விளங்கும் கல்கியைக் கேட்கிறோம்.

முஸ்லீம் லீகர்களும், திராவிடர்களும், இன்று ஆச்சாரியாருக்குத் தொல்லை தராமல், தூரநின்று வேடிக்கை பார்க்கின்றனர். அவர்களின் எதிர்ப்பும் ஒன்றாகி, இன்றுள்ள ஆச்சாரியார் எதிர்ப்புடன் சேர்ந்துவிட்டால், தமிழகத்திலே தத்தளிக்கும் ஆச்சாரியார், தலைகாட்டமுடியாது, தக்ளியும்கையுமாக ஆசிரமத்திலே அமர்ந்து, பழங்கதைகளை எண்ணிப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு வாழவேண்டும். திராவிட இஸ்லாமியரின் பலம் ஆச்சாரியாருக்குக் கேடயமாக இருக்கும் என்று அஞ்சுவதால் மட்டுமே, ஆச்சாரியாரை எதிர்க்கும் கூட்டம், சற்று அச்சத்தோடு நடந்துகொள்கிறது. இதை ஆச்சாரியார் உணர்கிறாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். காந்தியாரின் புதிய போர்த்திட்டம், நாட்டின் அமைதியைக் கெடுக்கும், எதிரிக்கு இடமளிப்பதாக இருக்கும், யுத்த ஆதரவைக்குலைக்கும், என்பன ஆச்சாரியாருக்குத்தெரியும். இவைகளை ஆச்சாரியார் விரும்பவில்லை. நாட்டைத்தாக்க நயவஞ்சகத்திட்டமிடும் ஜப்பானியரை எதிர்க்க நாட்டவர் நாடிமுறுக்குடன் வெளிவர வேண்டும், படையில் சேரவேண்டுமென்று ஆச்சாரியார் முரசுகொட்டுகிறார். அவர் முரசு இதுபோலும் அவரது சம்பந்தியார் போக்கு, எதிரிக்குத்தாம்பூலம் தருவதாகவும் இருக்கிறது உண்மையில் ஆச்சாரியார் நாட்டுக்குப் பணியாற்ற விரும்பினல், காந்தியாரின் இந்தக் கபோதிதிட்டத்தை மண்டைமீதடித்து நொறுக்கவேண்டும். ஆனல் ஆசை அங்கே இருக்கும்போது, அவர் இதனைச்செய்வாரா?

காந்தியாரே துடிக்கிறாராம், தத்தளிக்கிறாராம், அவரது உள்ளம், அக்கினிப்பிழம்பாகி விட்டதாம். அவரைச் சுற்றிக்கொண்டுள்ள சுருதிப் பெட்டிகள். காந்தியார் போர்க்கோலம் பூண்டு வெளிவரத்தயாராகி

(9ம் பக்கம் பார்க்க)

## கான்பகதூரின் கவனம்!

(கோவை M. A. ரஹ்மான்)

இந்நாட்டிலே இருக்கிற எல்லா அரசியல் கட்சிகளும் ஆண்டுதோறும் தவறாமல் மாகாண மகாநாடுகள் நடத்தி வருகின்றன. நேற்று தோன்றிய இந்து மகாசபையும் எத்தனையோ மாகாண மாநாடுகள் நடத்திவிட்டது! சமீபத்தில் கோவையில்கூட தமிழ் மாகாண இந்துமகாசபை மகாநாடு நடைபெற்றது. இதை எல்லாம் உணர்ந்த ஏனைய மாகாண முஸ்லீம் லீக் சபைகள் தத்தமது மாகாணங்களில், மாகாண மகாநாடுகளை மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றன. எவ்வித அரசியல் சீர்திருத்தமும் பெறாத, மாகாணம் என்ற பெயரும் பெறாத, பலுச்சிஸ்தான் முஸ்லீம்கள், "பலுச்சிஸ்தான் மாகாண முஸ்லீம் லீக் மகாநாடு" என்ற பெயரால் ஒரு மகாநாடு நடத்திவிட்டார்கள். ஆனால் ஐந்தாண்டுகள் ஆகியும் "மாகாண முஸ்லீம் லீக் மகாநாடு" என்ற பெயரையே நம் சென்னை மாகாண லீக் உச்சரிக்காமலிருந்து வருவது மிகவும் வருத்தமளிக்கிறது. ஏற்கனவே இதைப்பற்றி நான் சகோதர பத்திரிக்கை யொன்றில் எழுதினேன். எனினும் அதனை மாகாண லீக் சபை கவனிக்கவில்லை. மாகாண முஸ்லீம் லீக் மகாநாடு கூட்டவேண்டியது இந்நெருக்கடியான சமயத்தில் எவ்வளவு அவசியம் என்பதைவிளக்க இந்த ஏடு போதாது. இதனை மாகாண லீக் பிரமுகர்கள் யோசித்துத்தான் தெரிந்துக்கொள்ள வேண்டும். "மாகாண முஸ்லீம் லீக் மகாநாடு" என்ற வார்த்தையை எழுதிமுடிக்குமுன் ஜனாப் கான்பகதூர் கலிபுல்லாவின் கவனம் வந்துவிடுகிறது. ஏன்? அவர்தான் ஆதியில் திருச்சியில் தலைவர் ஜின்னாஹ் அவர்களின் தலைமையில் "மாகாண முஸ்லீம்லீக் மாநாடு" நடைபெற ஏற்பாடுகள் செய்தார்! வருந்தத்தக்க பலகாரணங்களால் அது நடைபெறாமல் தடைப்பட்டு விட்டது. துரதிர்ஷ்டவசமாக ஜனாப் கலிபுல்லா, அவர்கள் லீக்கிலிருந்து வெளியே ஏகும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. அவர் ஆற்றிய அபாரத்தொண்டினை மறப்பது மடமையாகும். ஜனாப் கலிபுல்லா போகாத இடமில்லை. பேசாத மேடையில்லை. அக்கிராசனம் வகிக்காத மாநாடும் இல்லை. **தமிழ் நாடு** ஜின்னாஹ் என்ற புகழ்ப்பெயரும் பெற்றார்.

மதுரையில் சோவியத் நண்பர்கள் மகாநாடு நடைபெற்றது எல்லாருக்கும் ஞாபகமிருக்கும். அதில் எல்லா கட்சித்தலைவர்களும் கலந்துக் கொள்ளுவார்கள், என்று அறிவிக்கப்பட்டதும் எல்லாருக்கும் ஞாபகமிருக்கும். அந்த மகாநாடு நடந்தேறிய செய்திகேட்டு நான் மிகவும் வருந்தினேன்! ஏன்? காங்கிரஸ்காரர் என்ற முறையில் தோழர் ராஜகோபாலாச்சாரியாரும், ஜஸ்டிஸ் கட்சிக்காரர் என்ற முறையில் **பெரியார்** ஈ. வெ. ரா. அவர்களும், சுயேச்சையானவர் என்ற முறையில் தோழர் கிருஷ்ணமாச்சாரியாரும் கலந்து கொண்டனர். ஆனால் முஸ்லீம் லீக்கின் சார்பாக அம்மகாநாட்டில் கலந்து கொள்ளத்தக்க தலைவர் மட்டும் கிடைக்கவில்லை. ஆஹா! நம் துர்பாக்கியத்தை என்னென்று சொல்வது? இந்தச்சமயத்தில் முஸ்லீம் லீக்கின் யுத்தக் கொள்கைக்கு சோவியத் நண்பர்கள் மகாநாட்டில் லீகர்கள் கலந்துக்கொள்வது சரியா? தப்பா? என்ற பிரச்சினையில் இறங்குவது புத்திசாலித்தனமும் அல்ல, ஆனால் இம்மாதிரி மகாநாடுகளில் கலந்துக் கொள்ள, ஆச்சாரியார், பெரியார் போன்ற பொதுஜன தொடர்புள்ள, நாவன்மைமிக்க தலைவர், நம்மாகாண லீகின் தலைவர் பீடத்தில் இருக்கிறாரா என்பதுதான் யோசிக்க வேண்டிய விஷயம். இந்த ஐந்தாண்டு சரித்திரத்தில் சென்னைமாகாணத்தில் முஸ்லீம் பொதுஜன தொடர்புள்ள சிறந்த சொற்பொழிவாளராக இருந்த தலைவர் ஜனாப் கான்பகதூர் கலிபுல்லா ஒருவர்தான் என்று நான் துணிந்து கூறுவேன். அவர்மட்டும் வேறு பாதையில் போகாமலிருந்திருந்தால் "மனதை வாட்டும் மதுரைக் குறை "ஏற்பட்டிருக்காது. என்ன செய்வது? கனம் கலிபுல்லாவின் முடிவு கவலை தருகிறது.

இனி தமிழ் முஸ்லிம்களாகிய நாம் செய்யவேண்டியது என்ன? மாகாண லீக்கின் மௌனத்தைக் கலைக்க வேண்டும்! ஆண்டுதோறும் மாகாண முஸ்லீம் லீக் மகாநாடு தவறாமல் நடத்திவர வற்புறுத்த வேண்டும். சாத்தியமானால் பொதுஜன தொடர்பு அறைகுறையாகப்பெற்றவரையேனும் தலைவர் பதவிக்குக்கொண்டு வரவேண்டும்! அதுவரையில் இருக்கிற தலைவர்களை மாகாண மெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்து லீக்பிரசாரம் செய்யவைக்க வேண்டும்!!! பிரசாரமில்லா விட்டால் கல்வி அறிவில்லாத பாமர முஸ்லீம்கள் இன்றைய அரசியல் நிலைமை எப்படி தெரிந்துக்கொள்ள முடியும்? எதிரிகள் கடைசி முயற்சியை கையாளப் போகிறார்கள்! நாம் உண்மை நிலையை பாமர முஸ்லீம்கட்கு சொல்லி எச்சரிக்கை செய்ய வேண்டாமா? ராஜதந்திர பாஷையில் வெளிவருகிற தலைவர் ஜின்னாவின் அறிக்கைகளை கிராம முஸ்லீம்கள் உணர்ந்து அதன் மூலம் எல்லாவற்றையும் தெரிந்துக்கொள்ள முடியுமா? அதனை விமர்சனம்செய்து கிராம முஸ்லீம்கட்கு தெரிவிக்க வேண்டாமா? கிராமங்களையே எட்டிப் பார்க்காத பொம்மைத் தலைவர்களால் என்ன பிரயோஜனம்? இப்போதிருக்கிற சென்னை மாகாண லீக் தலைவர்கள் கனம் கலீபுல்லா அவர்களைப்போல கிராமம் கிராமமாகச் சுற்றி சண்டமாருதப் பிரசாரம் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்படி தமிழக முஸ்லீம் லீக் சபைகள் மாகாண லீக் தலைவர்களை வற்புறுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

---

## மதிப்புரை.

### தமிழர் ராஜ்யம்

சி. பா. ஆதித்தன் எம். ஏ., பார்—அட்—லா அவர்களால் வெளியிடப்பட்டுள்ள 'தமிழர் ராஜ்யம்' எனும் சிறு பிரசுரம் வரப்பெற்றோம். தமிழரின் முற்காலச்சிறப்பையும் இக்காலம் அடைந்துள்ள அவர்தம் இழிநிலையையும் தன் நிலையில் ஆராய்ந்திருக்கிறார். மீண்டும் தமிழர் முன்னிலை பெறுதற்குத் தாங்கொண்டுள்ள கருத்துக்களையும் சித்தரித்துள்ளார். தமிழர் விடுதலைக்கு எவர் உழைக்க முன்வரினும் அது மகிழ்ச்சிக்குரியதே. காலப்போக்கில் 'தமிழர்' இன்னார் என்பதில் ஆசிரியர் இன்று கொண்டுள்ள கருத்தில் மாறுதல் நிகழின் அது ஆச்சரியமன்று; வரவேற்கத் தகுந்தது.

கிடைக்குமிடம்:—

தமிழன் காரியாலம்

மதுரை.

* * * * *

### தென் நாடு

Dr, E. சுப்ரமணியம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு ஆம்பூரிலிருந்து மாதமிருமுறை வெளியீடாக வரும் 'தென்நாடு' கிடைக்கப்பெற்றோம். பொதுவாக திராவிடர் நலமும் குறிப்பாக ஆதித்திராவிடர் நலமும் பேணுவது 'தென்நாடு' வின்நோக்கம் என்பது கண்டு மகிழ்கிறோம். நாம் துவங்கியுள்ள திராவிட— ஆரியப்போருக்கு 'தென்நாடு' மற்றோர் படை என்றே கூறலாம். ஆதலால் தமிழ் வெளியீடான இதனை தமிழர்கள் ஆதரித்து வளர்க்குமாறு வேண்டுகிறோம்.

வருடசந்தா ரூ. 1—8—0.

கிடைக்குமிடம்:—

'தென் நாடு'

ஆம்பூர் (N. A.)

## திராவிடத் தொண்டர் படை மாநாடு

### விருதுநகரில் விமரிசையாக நடந்தேறியது

(ந. நி.)

இராமநாதபுரம் ஜில்லா திராவிடத் தொண்டர்படை மாநாடு, விருதுநகரில், M. S. P. S. தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரக் கொட்டகையில், 12ந்தேதி, தோழர் C. N. அண்ணாத்துரை தலைமையில் விமரிசையாக நடைபெற்றது.

தோழர் W. P. S. சவுந்திர பாண்டியனார் மாநாட்டைத் திறந்துவைத்தார். திராவிடநாட்டுப் பிரிவினையை வற்புறுத்திப் பேசிவிட்டு, கட்சியின் எதிர்கால வேலைத்திட்டம் பற்றி, அடுத்த மாதம் நடைபெறப்போகும் நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்படுமென்று தாம் நிச்சயமாக நம்புவதாகவும், அத்தகைய ஏற்பாடுகள் நடைபெறாவிட்டால், தன்னைப்போன்றவர்கள் கட்சியில் இருக்கமுடியாது என்றும், ஆச்சாரியாரை ஆதரிக்கக்கூடாது என்றும், தலைவரும 'விடுதலை'யும், ஆச்சாரியாரை ஆதரிப்பதாக இருக்கும் நிலைமை உசிதமல்லவென்று தாம் ஏற்கனவே பெரியாருக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும் கூறிவிட்டு, கட்சியைப் பலப்படுத்தி, பெரியாரின் தலைமையின் கீழ் பெரிய வெற்றிகள் பெறவேண்டுமென்றும் கூறினார். மதுரைத் தோழர் A. வேணுகோபால் அவர்கள், நீதிக்கட்சியின் சிறப்புகளை எடுத்துரைத்துவிட்டு, கொடி ஏற்றிவைத்தார்.

தோழர் V. A. M வெள்ளையப்பன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அதில் நம் கட்சி மக்களுக்காற்றிய சேவைகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

தலைவரைப் பிரேரேபித்து விருதுநகர் தோழர் V. V. ராமசாமி அவர்களும், தோழர்கள் ராமலிங்கம், K. A. P. விஸ்வநாதம் ஆகியோரும் பேசினர். தோழர் C. N. அண்ணாத்துரை தமது தலைமை உரையில், திராவிடநாடு பிரிவினைபற்றி விளக்கிவிட்டு, தொண்டர்கள் எத்தகைய போர்த்திட்டத்தை நடத்திவைக்கவும் தயாராக இருக்கவேண்டுமென்றும், காந்தியாரின் புதுப்போர் நாட்டை எதிரிக்குக் காட்டிக்கொடுக்கும் செயலாகுமென்றும், அதனை எதிர்த்துப் பெரியார் புதுக்கிளர்ச்சித் துவக்கவேண்டுமென்றும் பேசினார்.

விருந்துக்குபிறகு விஷயாலோசனைக் கமிட்டி நடைபெற்றது மாலை 3 மணிக்கு மாநாடு மீண்டும் கூடியபோது திராவிடநாட்டுப் படத்தை வித்வான் முத்துக்குமாரசாமியும், செல்வம் படத்தைத் தோழர் S. S. பழனிச்சாமி அவர்களும், பெரியார் படத்தைத் தோழர் சுப்பிரமணியமும், பானகல்அரசர் படத்தைத் தோழர் அய்யாச்சாமி அவர்களும், ஜனாப் ஜின்னா படத்தைத் தோழர் K. A. P. விஸ்வநாதமும், திறந்துவைத்தனர்.

ஆச்சாரியாரை ஆதரிக்கக்கூடாது, காந்தியாரின் புதியபோர்த்திட்டம் எதிரிக்கு உடந்தையாக இருக்கும் துரோகச்செயலாகும், சமுதாய இழிவுகள்போக திராவிடத் தொண்டர்கள் பாடுபடவேண்டும், சென்னை ஹைகோர்ட்டில் ரிடயரான ஒரு பார்ப்பனரை ஜட்ஜாக நியமித்ததும், 'திரு' வை இன்னமும் ஏற்படுத்தாததும் கண்டு கட்சியினர் வருந்துவதாகவும், கோயிலில் முடங்கிக்கிடக்கும் சொத்துகளை நாட்டுப்பணிக்குப் பயன்படுத்த வேண்டுமென்றும், தீர்மானங்கள் நிறைவேறின. தலைவர் முடிவுரை, வந்தனங்கூறலுடன் மாநாடு இனிது முடிந்தது.

இரவு 7-மணிக்கு, தோழர் V. V. ராமசாமி அவர்கள் தலைமையில் அம்மன்கோயில் மைதானத்தில் ஓர் மாபெருங்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் C. N. அண்ணாத்துரை, K. A. P. விஸ்வநாதம், W. P. S. பாண்டியனார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.


## ஏஜண்டுகள் தேவை,

கீழ்க்கண்ட இடங்களில் நமது பட்டுகளுக்கு ஏஜென்ஸியை எடுத்து நடத்தத்திறமையுள்ள ஜில்லா ஏஜெண்டுகள் தேவை. ஜில்லா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, சாம்பிள் காட்டி, ஆர்டர் புக்செய்யவேண்டும்.

வாக்கு சாதுர்யமாக பேசுவோரும், நல்ல உழைப்பாளியாயுள்ளோரும், மாதம் ரூ. 150-முதல் ரூ. 500 வரை கண்டிப்பாக சம்பாதிக்கலாம். தகுந்த டிபாசிட் கட்டக்கூடியவர்கள் எழுதவும்.

ஜில்லாக்கள்.

| | |
|---|---|
| 1. திருநெல்வேலி. | 7. வடஆற்காடு |
| 2 மதுரை | 8 செங்கற்பட்டு |
| 3 திருச்சிராப்பள்ளி | 9 கோயம்புத்தூர் |
| 4 தஞ்சாவூர் | 10 நீலகிரி |
| 5. இராமநாதபுரம் | 11. சேலம் |
| 6. தென்னாற்காடு | 12 சித்தூர். |

கே. எஸ் முத்தையா கம்பெனி,

சில்க் அவுஸ் காசி. (ஸ்தாபிதம் 1909.)


## A. R. P.

1. உங்களுக்கு உதவிபுரிய இங்கு வார்டன்கள் உள்ளனர். அபாயச்சங்கு ஒலித்ததும் பதுங்கிக்கொள்ளுங்கள்.

2. சங்கொலி கேட்டதும் வீட்டிற்குள் சென்று விடுங்கள். பத்திரமான இடம் அதுதான்.

3. சங்கொலி கேட்டதும், பதுங்குமிடம் செல்லுக. காஞ்சீபுரம் A. R. P. வார்டன்கள், உதவிசெய்யத்தயாராக உள்ளனர்.

4. பதுங்கிட அமைத்துள்ள பள்ளங்களை அசுத்தம் செய்யாதீர். அவை உமது பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டவை.

5. எதிரியின் விமானத்தாக்குதலைச் சமாளிக்கத் தக்க ஏற்பாடுடன் இருக்கிறீரா?

1. வீட்டு விளக்குகளை மறைத்து வைத்திருக்கிறீரா?

2. மணல் மூட்டைகள் வேண்டிய அளவு சேகரித்திருக்கிறீரா?

3. தீ அணைக்கத்தண்ணீர் தயாராக வைத்திருக்கிறீரா?

4. பதுங்கியிருக்க "அறை" தேடிக்கொண்டீரா?

5. மோட்டார் வண்டி விளக்குகளை, கட்டுப்பாட்டின் படி, மூடி மறைத்தீர்களா?

இல்லையேல் இன்றே இவைகளைச்செய்ய ஆரம்பியுங்கள்.

சந்தேகந் தோன்றினாலோ, சங்கடம் நேரிட்டாலோ, உங்கள் வார்டன்களைக் கலந்தாலோசியுங்கள்.

உங்களுக்கு அவர்கள் உதவி செய்வார்கள்.

புதிய தொடர் கதை!

# * கலிங்க ராணி *

[ சோமியன். ]

முன்பு: [குலோத்துங்க சோழன் குதிரைப்படைத் தலைவருள் ஒருவன் வீரமணி. நடனராணி, குலோத்துங்கன் மகள் இளவரசி அம்மங்கையின் சேடி. வீரமணியும் நடனராணியும் காதலிக்கின்றனர். மன்னன் ஓர்நாள், பொழுது போக்குக்காக காட்டுக்குவேட்டையாடப் புறப்படுகிறான். வீரமணி, நடனராணியிடம் கூறிவிட்டு, மன்னனுடன் செல்கிறான். காட்டிலே மணியும், அரண்மனைத் தோட்டத்திலே நடனராணியும் இருக்கையில்...................]

இயற்கை எழில் செயற்கைப் பூச்சின்றி பூரித்துக் கிடக்கும் காட்டினுள்ளே, மன்னன் குலோத்துங்கன் தன் பரிவாரங்களுடன், வேட்டைக்காகப் புகுந்த காட்சியும், குதிரைமீதமர்ந்து பாய்ந்துசென்ற வீரர்களின் வருகைகண்ட துஷ்ட மிருகங்கள் மிரண்டோடினதும், கண்ட வீரமணிக்கு, குலோத்துங்கன், இளவரசாக இருந்தபோது, வடநாடுசென்ற காலையில், சோழநாட்டிலே சதிகாரர் கூடிக்கொண்டு, குலோத்துங்கனுக்கென்று கங்கைகொண்ட சோழன் குறித்திருந்த மணிமுடியை, கங்கைகொண்ட சோழனுடைய மகன் அதிராசேந்திரனுக்குச் சூட்டியதும், அதுபோது சோழ மண்டலமே கஷ்டத்திலே அடைந்ததும், பிறகு, வாகைசூடி வடநாட்டிலிருந்து குலோத்துங்கன் திரும்பியதும், சதிகாரர் பதுங்கிக்கொண்டதுமான சம்பவ முழுமையும், காட்சியும் நினைவிற்கு வரவே, புதர்களிலே மறையும் புலிக்குட்டிகளையும், மரப் பொந்துகளில் ஓடி ஒளியும் மந்திகளையும், வீறிட்டு அலறி ஓடும் வேங்கையையும், உறுமிக்கொண்டே ஓடும் காட்டுப் பன்றியையும், மிரண்டோடும் மான் கூட்டத்தையும் கண்டு களித்தான். காட்டிலே கணைகள் சரமாரியாகக் கிளம்பின. ஆரவாரமும், ஆர்ப்பரிப்பும் பறை ஒலியும் பலமாகக் கலந்து காட்டிலே கலக்கத்தை உண்டாக்கிற்று. வேட்டை விருந்தை மன்னருக்குத்தந்த காடு, வனப்புவாய்ந்தது. வேங்கை, குறிஞ்சி, தேக்கு, கமுகம், புன்கம், முதலிய மரங்கள் நிறைந்து காணப்பட்டன. உலர்ந்து நாணப்பட்ட ஓமைமரங்களும், புதைந்துகிடந்த வீரைமரங்களும், காரைச்செடியும் சூரைச்செடியும், காண்போருக்கு இயற்கையின் விசித்திரத்தை விளக்கின. சந்தனமரங்கள் ஓர்புறம், அதன்மீது தமது உடலை மோதியானைகள் தேய்த்ததால் உண்டான மணம் 'கம்' மென்று கிளம்பிற்று. இண்டங்கொடிகள் இங்குமங்குமாகச் சுருண்டுகிடந்தன. மரத்தின் வேரோடு வேர்போல்மலைப்பாம்புகள் உண்டஅலுப்பு தீரப்புரண்டுகிடந்தன. வாகையும் கூகையும், மூங்கிலும் பிறவுமான பல விருட்சங்கள் விண்முட்டுவோம் என்றுரைப்பதுபோல் வளர்ந்துகிடந்தன. சிற்சிலஇடங்களிலேகுலைகுலுங்கும்வரை வாழையும் காணப்பட்டன வீரர்கள் தமது கணைகளைவிடவே, கரிக்குருவியும் கானங்கோழியும், காடையும் கிள்ளையும், மயிலும் மாடப்புறாவும், உள்ளான் சிட்டு கம்புள், குருகு, நாரை, குயில் முதலிய பறவைகள், பயந்துக் கூவி, பல்வேறு திசைகளிலே பறந்தன. பறக்கும்போது பலவித ஒலிகிளப்பியது, புதியதோர் பண் போன்றிருந்தது. கானூறு, ஒருபுறம். காட்டெருமைக் கூட்டம் மற்றோர்புறம். யானைஒருபுறம். புலிகரடிவேறோர் புறம். விறுகொண்ட மரங்களிலிருந்து கிலிகொண்டு சிறகைவிரித்துப்பறந்தன பெரும்பறவைகள்! குரங்குக் கூட்டம் கிச்சென்றுகூவி, கிளைவிட்டுக் கிளைதாவி, வீரரின் வாள்வேல் ஒலி ஒளியால் கிலிகொண்டு குதித்தோடின. வால்சுழற்றின வேங்கைகள். குள்ளநரிகள் ஊளையிட்டன. முட்புதர்களைத் தாண்டிக்கொண்டு சிறுத்தைகள் சினந்தோடின. கருங்கற்களிலே, பிலங்கள் தேடின பாம்புகள். இத்தகைய காட்சிகளைக் கண்டுகளித்து, வில்வளைத்துக் கணைகள் தொடுத்து, விரைந்தோடி வாள்கொண்டுதாக்கி, வேல்எறிந்து வேங்கையையும் வேழத்தையும் வீழ்த்தி, வீரவிளையாட்டிலே ஒரு நாள் பூராவும் கழித்தனர், மன்னரும் அவர் தம்பரிவாரமும். வேட்டையிலே கிடைத்த பொருள்களைச் சேகரித்து, வீடுதிரும்ப, மன்னன் கட்டளை பிறக்குமென்று எண்ணிய வீரமணி, பொழுது சாய்வதற்குள் ஊர் சென்றால், மீண்டுமோர்முறை பூங்காவிலே நடனராணியைக் கண்டுகளிக்கலாம், காட்டிலே கண்ட காட்சிகளை, வேட்டையாடியசெய்திகளைக் கூறிடலாம் என்று கருதினான். மேலும் அவன் பக்குவமாக ஓர் பஞ்சவர்ணக் கிளியைப் பிடித்துவைத்திருந்தான். அதனை நடன ராணிக்குத்தர விரும்பினான். ஆனால் அவன் எண்ணியது ஈடேறவில்லை. மன்னன் புதியதோர் கட்டளை பிறப்பித்தான். புறப்படுக காஞ்சிக்கு, என்று கூறிவிட்டான். புரவிகள் காவிரிக் கரைக்காட்டைக் கடந்து கச்சி செல்ல விரைந்தன.

அன்றுமாலை, அரசிளங்குமரி அம்மங்கையும், நடனராணியும், மற்றும் சில தோழியரும், வழக்கம்போல் களித்தாடிக் கொண்டிருந்தனர். நடனராணியின் உள்ளம், காட்டிலே, கணைவிடும் காதலன்மீதே இருந்தது. பலவகைவிளையாட்டுகளில் பாவையர் ஈடுபட்டனர், பரிவாரங்களுடன், காட்டுக் காட்சிகளையும் இடையே உள்ள நாட்டுமாட்சியையும் கண்டுகளித்து கச்சிபோய்ச் சேருமுன்னம், மன்னன் வருகையை முன்கூட்டி, கச்சிக்காவலனுக்குக் கூறிட, வீரமணியை, விரைந்து முன்னால் செல்லுமாறு மன்னன் சட்டளையிட்டான். மன்னன் மொழிக்கு மாற்றுமொழிகூறல் எங்ஙனம் இயலும். பஞ்சவர்ணக்கிளியை, தோழனொருவனிடம் தந்து, அதனைத்தன் காதலியிடம் தந்து, தான் கச்சி நகருக்குக் கடுகிச்செல்வதைக் கூறுமாறு வேண்டிக்கொண்டான். செவி மந்தமுள்ள அத்தோழன், யாரிடம் கிளியைத்தருவது என்பதைச் சரியாகத்தெரிந்துகொள்ளவில்லை. "நான் மணம்செய்துகொள்ள இருக்கும் அம்மங்கையை நீ அறியாயோ" என்று வீரமணி அவசரத்துடன் கேட்க, தோழன், "அம்மங்கையை அறிவேனே" என்று கூறிக்கொண்டே கிளியைப் பெற்றுக்கொண்டான். அவன் மன்னன் குமரி அம்மங்கைத்தேவியையே, வீரமணி குறிப்பிடுவதாகக் கருதினான். அவனையே மன்னன் அழைத்து, "ஏ! மருதா! விரைந்து நம் நகர்சென்று, வழிசை வல்லியாரைச் சேடியருடன் கச்சிவரச்சொல்லு. நாம் அங்கு சின்னாட்கள் தங்க எண்ணியுள்ளோம்" என்றுகூறிட, மருதன், தலைநகர் புறப்பட்டான்.

பஞ்சவர்ணக்கிளியோடு மருதன் உறையூர் நோக்கியும், கவலையுடன் வீரமணி கச்சிநோக்கியும் விரைகின்றவேளையிலே, மன்னன்குமரி அம்மங்கை. தோழியருடன் பூங்காவிலே விளையாடிக் கொண்டிருந்தாள். பொழுது சாய்கிறது, போனவர் திரும்பக்காணோமே என்று நடனராணி ஏக்கத்துடனேயே, விளையாட்டில் விழியும், வீரமணியிடம்மனமும் செலுத்திக்கிடந்தாள்

(தொடரும்)

காஞ்சி நிதி லிமிடெட்.
காஞ்சிபுரம்
29-வது ஸீரிஸ் ரூ. 500, 250, சீட்டுகள் 25—7—42ல் ஆரம்பிக்கப்படும் சந்தாதாரர்களாக சேர விரும்புவோர்கள் உடனே விபரங்களுக்கு எழுதவும்.
K. R. CHARY, B. A., Secretary.

திராவிடநாடு

ஞாயிறு] 19—7—42 [காஞ்சி.

# கூண்டிலிருந்து வெளியேவாருங்கள்!

காந்தியாரின் புகழ் உன்னத நிலையில் இருந்த காலத்தில் அவர் இறந்திருந்தால் அவரது வாழ்க்கை வரலாறு உலக சரித்திர ஏட்டில் மிகவுப் பரிமளிக்கத் தக்கதாய் இருந்திருக்கும்; ஆனல் இப்பொழுதோ அவர் வெளியிட்டுவரும் முன்னுக்குப்பின் முரணான கோரிக்கைகளால் அவருக்கு ஏற்பட்டிருந்த மதிப்பை எல்லாம் இழந்துவிட்டார் என்று ஓர் அமெரிக்கப் பத்திரிகை குறிப்பிடுகிறது. காந்தியாரும் காங்கரசும் தோன்றி இராவிட்டால் இந்திய மக்களுக்கு அரசியல் துறையில் இத்துணை கேடுபாடுகள் ஏற்பட்டிரா என்று நாம் பலகாலும் வலியுறுத்திக்கூறி வந்துள்ளோம். இரண்டொரு நாட்களுக்குமுன் 'அந்தராத்மா' வால் உந்தப்பெற்று 'வார்தா முனி வெளியிட்டுள்ள அறிக்கையும், அங்கு ஒன்பது நாட்களாக காங்கரசுக்கமிட்டி மேலேகொல்லி ஆலோசித்து முடிவுசெய்த நெடிய தீர்மானமும் நமது கருத்தை வலுப்படுத்துகின்றன. பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து உடனே வெளியேறிவிடவேண்டும் என்று பிரிட்டிஷாருக்கு ஓர் அவசரக்கட்டளை. அந்தக்கட்டளைப்படிநடக்காவிட்டால் நாடெங்கும் பரந்தஅளவில் பலாத்காரமற்ற போராட்டம் தொடங்கப்படும் என்று எச்சரிக்கை. இவைதான் காந்தியாரின் அறிக்கை, காங்கரசின் தீர்மானம் இவற்றின் அடிப்படையான கருத்துகள். இந்தியாவின் தற்போதைய அரசியல் சமுதாய நிலைமைகளில் காந்தியாரின் கூற்றும், காங்கரசின் தீர்மானமும் இந்திய மக்களுக்கு மாபெரும் கெடுதி விளைக்கும் என்று அஞ்சவேண்டியிருக்கிறது. உலகம் எங்கும் காந்தியாரின் கூற்றையும் காங்கரசுத் தீர்மானத்தையும் கண்டு வியப்புடன் கலந்த அருவருப்பே ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதுபற்றி பிரிட்டிஷ் அமெரிக்கப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ள கருத்துகளை நமது நாட்டினர் கவனிக்கவேண்டுமாய் அவற்றை இங்கே எடுத்துக்கூற விரும்புகிறோம். காங்கரசின் தீர்மானத்தைப் பற்றி பொறுமையுடன் கருத்துக்கூறுவது கடினமாய் இருக்கிறது. காங்கரசுத்தலைவர்களுக்கும் இந்திய அரசியலின் உண்மை நிலைமைகளுக்கும் சம்பந்தம் இல்லைஎன்றே இந்தத்தீர்மானத்தினல் வெளிப்படுகிறது என்று "யார்க்ஷயர் போஸ்ட்" பத்திரிகை கூறுகிறது. உண்மையை ஒளிப்பு மறைப்பின்றுகூறுவதாயின் இந்தியாவின் பொதுநலனுக்குமாறாக காங்கரசுக்கட்சியார் தங்கள் சுயநலத்துக்கு ஆக்கந்தேட முற்பட்டிருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும். பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வெளியேற நேரிட்டால் காங்கரசுக் கட்சிக்கே மாபெரும் கேடு விளையும். ஜப்பானின் ஆக்கிரமிப்பு கல்கத்தாவையும், ஏன், டில்லியின் வாயிலையும் அணுகியிருக்கிற இந்த வேளையிலே இவ்விதத் தீர்மானத்தை வெளியிட்டிருப்பது எவ்வளவு முட்டாள்தனம் என்று பாருங்கள் என்று "பர்மிங்காம் போஸ்ட்" பத்திரிகை கடாவுகிறது. இந்தியாவின் உண்மை நிலைபற்றிய அறிவு முழுவதையுமே காங்கரசுத்தலைவர்கள் இழந்து விட்டார்கள் என்று இதனல் தெரிகிறது என்று "லிவர்ப்பூல் டெயிலி போஸ்ட்' குறிப்பிட்டுள்ளது.

பளீர் என்று அறைகொடுப்பது போல 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை கூறியிருப்பதைப் பாருங்கள். இந்தியா சம்பந்தமாக ஏதும் புதியதிட்டம் வெளியிடப்படும் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள திட்டமே மிக விரிவானதும் பூர்த்தியானதுமாய் இருக்கிறது. இப்பொழுது முஸ்லீம் லீகுடனும் மற்ற பெரிய சிறுபான்மைக் கட்சிகளுடனும் ஒப்பந்தம் செய்துகொள்வதே காங்கரசுக் கட்சியார் செய்ய வேண்டிய முக்கிய வேலையாகும்" என்று "டைம்ஸ்" பத்திரிகை யோசனை கூறுகிறது. லண்டன் டைம்ஸ் பத்திரிகையை பிரிட்டிஷ் அரசினரின் வாய் என்று கூறுவதுண்டு. எனவே பிரிட்டிஷார் காந்தியாரின் இந்தப்புதிய கபட நாடகத்துக்கு இடம் கொடுக்கப்போவதில்லை என்று நம்ப இடமிருக்கிறது. சர் ஸ்டாபோர்டு கிரிப்சு அளிக்கச்சென்ற விடுதலைத்திட்டம் பற்றி காங்கரசுக்கு கவலையில்லை. தன் சர்வாதிகார நிலைமையைப் பலப்படுத்திக்கொள்வதில் மாத்திரம் அது சிரத்தைகொண்டுள்ளது என்று "டேய்லி டேலிகிராப்" பத்திரிகை கூறுகிறது. இனி, காந்தியாரின் விபரீதப்போக்கால் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள மனப்பான்மையை விளக்க இரண்டொரு சான்றுகளை இங்கே தருகிறோம்.

"பிரிட்டிஷார் தவறுசெய்யவில்லை என்று சொல்ல முடியாதாயினும்; இப்பொழுது காந்தியார் கேட்கிறபடி செய்வார்களாயின் அவர்கள் முன்னிலும் அதிகமான தவறைச்செய்தவர்களாவர் என்று நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை எழுதியுள்ளது. 'வாஷிங்டன் போஸ்ட்' என்ற பத்திரிகையோ காந்தியாரின், பிடிவாதப் போக்கைக் கவனித்தால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை உணர அவருக்கு சக்தி இல்லையோ என்று சந்தேகம் உதயமாகிறது என்று குறிப்பிட்டுள்ளது. இதுவரை இந்தியாவைப்பற்றி அமெரிக்க நாட்டினரிடை உண்டாகி இருந்த நன்மதிப்பெல்லாம் காந்தியார் காங்கரசு இவைகளுடைய தற்போதைய நயவஞ்சக திட்டத்தினல் அழிந்து பட்டதுமன்றி காங்கரசுத்தலைவர்களின் அரசியல் ஞானசூனியத்தைக் கண்டு அமெரிக்காவில் இகழ்ச்சியும் வெறுப்பும் துளிர்த்துள்ளன என்பதை இதனல் தெரிந்து கொள்ளலாம். முன்பு காந்தியார் தோற்றுவித்த ஒத்துழையாமை சட்ட மறுப்புப் போன்ற இயக்கங்களுக்கு அவற்றின் புதுமையைக் கண்டு மதிமோசம்போய் பல்லாயிரம் மக்கள் ஆதரவு தந்தனர். இப்பொழுதோ அப்படியில்லை. யுத்த நெருக்கடியும், யுத்தபீதியும் மக்களைப் பலவழிகளிலும் கலவரப் படுத்தி நிற்கின்றன. மேலும் காந்தியாரின் முந்தின இயக்கங்கள் ஒவ்வொன்றும் மிகவும் கேவலமான தோல்வியைப் பெற்று, நாட்டின்முன்னேற்றத்துக்கு குந்தகம் ஏற்பட்டதைக் கண்டுபொது மக்கள் இப்பொழுது கண்விழித்துள்ளனர். சிறுபான்மைக் கட்சிகளும், முஸ்லீம்லீகும் காந்தியாரின் புதிய நாடகத்தை எதிர்க்க முற்பட்டு நிற்கிறார்கள். சர்க்கார் இந்த மிரட்டலுக்கு பணிந்து காங்கரசுத் தலைவர்களிடம் அரசாங்க அதிகாரத்தை ஒப்படைத்தால் நாட்டில் உள்நாட்டுக்கலகம் ஏற்படும் என்று முஸ்லிம் லீக் தலைவர் ஜனப் ஜின்னு தெள்ளத்தெளிய எடுத்து கூறி எச்சரிக்கை விடுத்துள்ளார். சென்னை சட்ட

சபை ஜஸ்டிஸ் கட்சித்தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான குமார ராஜா சர் எம். ஏ. முத்தையா செட்டியார் காந்தியாரின் போலித்திட்டத்தை மாபெரும் பாதக முயற்சி என்று குறிப்பிட்டுள்ளார். நாட்டின் உண்மை நிலைமைகளை உணர்ந்து அவற்றுக் கேற்ப ஏற்பாடு செய்ய காங்கரசுத் தலைவர்களுக்கு ஆற்றல் இல்லை என்பதுதான் காங்கரசு நிர்வாகக் கமிட்டி தீர்மானத்தால் வெளிப்படுகிறது. காங்கரசுராஜ்யம் நிறுவுவதற்காக பிரிட்டிஷ் சர்க்காரை மிரட்டிப் பணியவைப்பதே அதன் நோக்கம் என்று தெரிகிறது. இதனால் உள்நாட்டுக் கலகம் ஏற்படுவதுடன் வகுப்புத் துவேஷமும் விறுகொண்டெழுமே அன்றிவேறில்லை. நாடெங்கும் பொதுமக்களை சட்ட மறுப்புக்கு தூண்டிவிடுவது பெருங்குற்றமாகும் என்று அவர் கூறியிருக்கிறார். காங்கரசின் இறுதிக் காலம் தொடங்கிவிட்டதென்றே இவைகளிலிருந்து ஊகிக்கக்கிடக்கிறது.

தோழர் இராசகோபாலாச்சாரியார் இரண்டொரு நாட்களுக்குமுன் சென்னை சட்டசபை காங்கரசுத்தலைவர் பதவியையும், சட்டசபை அங்கத்தினர் பதவியையும், ராஜிநாமா செய்தபொழுது தாம் கூண்டிலிருந்து வெளிவந்து விட்டதாகவும் சென்னை காங்கரசார் காந்தியாரின் திட்டத்தை ஆதரித்து தீர்மானம் செய்ததால் புதிய விலங்குகளை மாட்டிக்கொண்டதாகவும் கூறினாராம். இந்திய சர்க்காரோ காந்தியாரின் புதிய இயக்கத்தைப்பற்றி அதிகமாய் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதாய் தோன்றவில்லை. இந்த இயக்கம் சில இடங்களில் பரவினாலும் வெகுநாள் நிலைத்து நிற்காது என்று சர்க்கார் அதிகாரிகள் நினைக்கிறார்களாம். ஆயினும் அரசாங்கத்தார் எவ்வித நிலைமையையும் சமாளிக்க தயாராய் இருப்பதாகவும், காங்கரசுத்தலைவர்கள் சட்டமறுப்பு தொடங்கினால் உடனே தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்கள் என்றும் "மெயில்" பத்திரிகையின் நிருபர் புதுடில்லியிலிருந்து அறிவிக்கிறார். ஆகவே காந்தியாரின் புதிய இயக்கம் மூன்று நாளைய வேடிக்கையாகவே முடியும் என்று தோன்றுகிறது. அவ்விதமுடிவை உண்டாக்க மக்கள் எல்லாரும் காங்கரசு மோசக் கூண்டிலிருந்து வெளிப்பட்டு காந்தியாரின் புதிய காளிபாட்டத்தை அடக்க அரசாங்கத்தினருக்கு ஆதரவுதர முன்வரவேண்டும்.

### கரூர்.

கரூர் நகர சபைத் தேர்தலில் பார்ப்பனர்கள் முறியடிக்கப்பட்டு, தமிழர்கள் வெற்றிபெற்றதைப் பாராட்டுகிறோம். கரூரைத் தமிழர் கோட்டையாக்க இதுவே தக்கதருணம். தளராது உழைத்திடின் வெற்றி நமதே.


## எவரெடி எலக்டிரிக் கம்பெனி
### திருவானைக் காவல்

எமது எவரெடி எலக்டிரிக் டைமன் கம்பெனியின். சோல் ஏஜண்டாக இதுவரையிருந்துவந்த சைமன் S. ராமசாமி நாயுடு அவர்களை 5—7—42 தேதி முதல் வேலையிருந்து நீக்கிவிட்டோம்.

எமது கம்பெனி சம்மந்தமாக ஷை யாரிடம். ஷை தேதி யிலிருந்து யாதொருவித சம்மந்தமும் வைத்துக்கொள்ள வேண்டாமென்றும் இதற்குப்பின். ஷை யாரிடம் வைத்துக்கொள்ளும் சம்மந்தத்திற்கு எவ்விதத்திலும் நாங்கள் கட்டுபடமாட்டோமென்றும் இதனால் பொது ஜனங்களுக்கும் வியாபாரிகளுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சி. வாகுபிள்ளை


சுயமரியாதை இயக்கத் தந்தையும்
ஜஸ்டிஸ் கட்சி எனும் நீதிக்கட்சிக்குத் தலைவருமாகிய
**பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள்**
எழுதியது.

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் தமிழ் நாட்டில் பரம்பரை அரசாங்க வைத்திய குடும்பத்தில் தோன்றியவர்.

சென்னையில் அவருடைய தமிழ் மருத்துவசாலையில் செய்யப்படுகிற சிலமருந்துகளின் குணத்தை நான் உணர்ந்திருக்கின்றேன். அவைகள் குறிப்பிட்ட நோய்களைக் கண்டித்து குணத்தைத் தருகின்றன.

அவருடைய இலவச வைத்திய சாலையை நான் பார்த்திருக்கின்றேன். ஏழைகள் பலர் நாள்தோறும் வந்து நோய் நீங்கி நலமடைகின்றார்கள்.

தமிழ் (சித்த) வைத்திய வளர்ச்சிக்காக சென்னையில் பல ஆண்டுகளுக்கு முன் தமிழ் வைத்திய சங்கத்தை நிறுவி வேலைசெய்து வருகின்றார். அவருடைய உழைப்பினால் தமிழ் மருத்துவத்துக்கும், பரம்பரை மருத்துவர்கட்கும் புதிய சக்தி உண்டாகி இருக்கிறதென்று கூறுகின்றேன். இவர் பொதுநலத்தில் ஈடுபட்டவர்.

(ஒம்) **ஈ. வே. ராமசாமி.**

**பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்,**
தமிழ் மருத்துவ கூடம்.
10. ராகவையா வீதி, தியாகராயநகர், சென்னை.
தற்கால கிளை:—
143. நடுத்தெரு, சேக்குப்பேட்டை, காஞ்சிபுரம்.

### சீர்திருத்தத் திருமணம்

15ந்தேதி காலை 7-மணிக்கு குடந்தை சுண்ணாம்புக்காரத் தெருவிலிருக்கும மருதா நல்லூர், தோழர் N. முனுசாமி நாடார் அவர்கள் இல்லத்தில் ஷை யார் குமாரர் தோழர் கிருஷ்ணமூர்த்திக்கும் தஞ்சை. மாரியம்மன் கோவில், தோழர் குப்புசாமி நாடார் புதல்வி தோழர் கோவிந்தம்மாளுக்கும் இவ்வூர் ஆனரரி மாஜிஸ்டிரேட். தோழர் V. சின்னதம்பி அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது தோழர் K. K. நீலமேகம் அவர்கள் சீர்திருத்த திருமணத்தின் அவசியத்தைப் பற்றி ஓர் அரிய சொற்பொழி வாற்றினார். தோழர் P. தியாகராஜன் அவர்கள் வந்தனங்கூற சந்தனம், தாம்பூலம் கற்கண்டு வழங்கப்பட்டன. பகல் 12 மணிக்கு ஓர் இனிய சமபந்தி விருந்து அளிக்கப்பட்டது.

குறிப்பு:—ஷை திருமணத்தை முன்னிட்டு 'விடுதலைக்கு' ரூ 2 (இரண்டும்) 'திராவிட நாட்டுக்கு' ரூ 1. (ஒன்றும்) தோழர் K. K. நீலமேகம் அவர்கள் மூலம் நன்கொடை அளிக்கப்பட்டது.

8ம் பக்கத் தொடர்ச்சி. போர்க்கோலம்.

போர் திட்டத்துக்காக அமெரிக்கா செலவிடும் தொகையின் அளவு கேட்டாலே பிரமிக்கவேண்டும். 223,000,000,000, டாலர் யுத்தத்திற்காக அமெரிக்கா செலவிட திட்டம். இந்தப்பணம், டாங்கி, மோட்டார் கப்பல், சப்மெரைன், டார்பிடோ, வெடிகுண்டு, விமானம் ஆகிய உருவில் வெளிவந்து அச்சு நாட்டு ஆணவத்தை முறியடிக்கத்தான் போகிறது. அமெரிக்காவின் யுத்த திட்டம் உருவாக அமைவதற்குள் போரிலே கிடைக்கக்கூடியதைச் சுருட்டிக்கொள்ளவே ஹிட்லர் இவ்வளவு அவசரப் படுகிறார். ஆபத்து திரண்டு உருண்டு வருவதற்குள், ரஷியாவைப் பிடித்துவிட வேண்டுமென்பது ஹிட்லரின் எண்ணம். ஆனால், சென்ற ஆண்டு மாஸ்கோவின் வாயற்படியிலே வந்தும் விரட்டியடிக்கப்பட்ட நாஜிகளின் நினைப்பு இனி ஈடேறாது!

# போர்க்களங்களிலே

## வோல்காமுனையில்!

வெறிபிடித்த நாஜித்துருப்புகள் நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் வோல்கா நதிதீரத்தைப் பிடிக்கத் துடிக்கின்றனர். மூர்க்கத்தனமான அவர்களின் போரினால் டான் நதி இரத்த ஆறாகிவிட்டதாம். வார்னேஜ் கடும்போர், செபாஸ்டபோல் சமர்போலச் சரிதப்புகழ் பெற்றுவருகிறது. அந்த முனையிலே மற்றும் இருஇடங்கள் சோவியத்சேனைகளால் காலிசெய்யப்பட்டுவிட்டன. மறுபடி மாரிக்காலம் பிறப்பதற்குள், வளப்பம்பொருந்திய டான் நதிப்பிரதேசத்தைப் பிடித்து, வோல்கா நதிதீரத்தைத்தாக்கி, ஸ்டாலின்கிராட் நகரைப்பிடித்துவிடவேண்டுமென்பது நாஜி நினைப்பு. ஏற்கனவே, சோவியத்துக்குக் களஞ்சியமாக உள்ள உக்ரேன், ஜெர்மன்வசம் சிக்கிவிட்டது. இப்போது டான் நதிவெளிக்கு நெருக்கடி முற்றுகிறது. இருந்தாலும் யூரால் மலைப்பகுதியிலே, சோவியத் மகத்தான இயற்கை செயற்கைச் சக்திகளைத்திரட்டி வைத்திருக்கிறது எனவே, டான் வெளியைப்பிடித்து விட்டால் சோவியத்தின் சக்தி சரிந்துவிடும் என்று கருதுவது ஈடேறாது. சோவியத் போர்முறை வீரத்துக்கோர் எடுத்துக் காட்டாக இருப்பதுமட்டுமல்ல, திறனும்உள்ளது. எனவேதான் ஆஸ்திரேலிய ராணுவக்கோஷ்டியொன்று சோவியத் டாங்கிப்போர் முறையைக்கண்டுவர, மாஸ்கோ போயிருக்கிறது.

## டான்நதி தீரம்

4000 டாங்கிகளாம், 3000 விமானங்களாம், எட்டு மோட்டார் படை வரிசைகளாம்! டான்நதி தீரத்திலே இத்தகைய பிரம்மாண்டமான சக்தியுடன் சுவஸ்திகக் கொடியோன் 150 மைல் போர் முனையிலே, மேல் பாய்ந்த வேங்கைபோல அலைந்து திரிகிறான். சோவியத் தலைவர்கள், தமக்கு ஏற்பட்டுள்ள இன்றைய ஆபத்தை உணராமல் இல்லை. நாஜியின் முழுசக்தியும் தம்மீது திருப்பப்பட்டிருப்பது கண்டு அவர்கள், தீரத்தைப் பன்மடங்கு அதிகரித்து வருகின்றனர். தமது கோட்டைகள் தூளாவதுகண்டு குமுறுகின்றனர். ஏற்கனவே 30000 ஹிட்லர் யுவர்கள், சோவியத்நாட்டிலே, அதாவது நாஜியிடம்பிடிபட்ட பிரதேசத்திலே, குடிஏறி இருக்கின்றனராம். தாமரைத்தடாகத்திலே முரட்டு எருமை புகுந்து, மலரைக்காலால் மிதித்து அழிப்பதுகண்டால் எங்ஙனமிருக்கும். அதுபோலிருக்கிறது சோவியத்மக்கள் மனம்.

## பிராவ்தா பேரிகை!

"இறுதிவரை போரிடுக! நமது நாட்டின் நடுநாயகங்களுக்கு நெருக்கடி ஏற்பட்டு விட்டது. டான் நதிக்கரையிலே எதிரி தனது காட்டுமிராண்டிக் கூட்டத்தைக் குவித்துக் கொக்கரிக்கிறான். நமது முன்னோர்கள் இந்த இடத்திலே எதிரிகளை முன்னாளில் முறியடித்துள்ளனர். சோவியத் வீரர்களே! நீங்கள் எதிரியைத் தடுத்து நில்லுங்கள், எதிரியை அடித்தொழிக்க முடியும், அடித்தொழிக்க வேண்டும், என்று பிராவ்தா பேரிகை கொட்டுகிறது. சோவியத் மக்களுக்கோர் சூரத்தனமான சுறுசுறுப்பு ஊட்டும் இச்சொல்.

## அவரது நெஞ்சு!

ஸ்டாலின், மௌனமாக இருக்கிறார். நெஞ்சிலே அவருக்கு வேதனை இல்லாமற் போகுமா? ஜெர்மன் சேனைத் தலைவர் " வ்ரான்பக், மார்ஷல்டிமோஷிங்கோவின் படைகளை வளைத்துக்கொள்ள திட்டமிடுவதும், சோவியத்படைகள் வீரமிக்க வெஞ்சமர்புரிந்தும், பல இடங்களைவிட்டு வெளியேறவுமான நிலைமை இருப்பது கண்டு, ஸ்டாலின் மனம் புண்படாமலிருக்குமா! சோவியத்துக்கு இது சோதனைக்காலம். அதன் வீரத்தை உலகு புகழ்கிறது. உதவிபுரிய உலகு துடிக்கிறது. பிரிட்டனும் அமெரிக்காவும் பொருள் தருகிறது. ஆனால், ஜெர்மன் படைகளைப் பிளந்துவிட, இரண்டாம் போர்முனை துவக்கினால், சோவியத்துக்கு ஏற்பட்டுள்ள சொல்லொணா நெருக்கடி குறையும்.

## இரண்டாம் முனை!

இரண்டாம் போர்முனை பற்றி, மாஜி யுத்த மந்திரி மிஸ்டர் ஹோர் பெலிஷா காரசாரமாகப்பேசியுள்ளார். எகிப்திலே அச்சு நாட்டுக்காகச் செய்துவந்த பிரசாரம் பலிக்கவில்லை. நாஜிகளின் நடவடிக்கைகளை எகிப்தியர் விரும்பவில்லை. எகிப்துபடையில் ஒரு பகுதியினர், நாஜிகளை எதிர்த்துப் போரிடவேண்டுமென்றும் கூறுகின்றனர்.

## துருக்கியின் கனிவு!

துருக்கியின் தூதர் அகமத்ரவுப் ஓர்பே, துருக்கியின் மனம் பிரிட்டின் பக்கமிருப்பதை விளக்கி, பர்மிங்காமில் பேசினார். துருக்கிசென்றஆண்டு இருந்ததைவிட இவ்வாண்டு இருமடங்கு பலத்துடன் இருப்பதையும், அச்சுகாட்டினர், துருக்கிக்கும் பிரிட்டனுக்குமிடையே பேதமூட்ட சூழ்ச்சிசெய்வதை பிரிட்டன் உணரவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

## சீனா!

சீனாவிலே போர்நிலைமை வழக்கப்படி குழப்பமாகவே இருக்கிறது என்றபோதிலும், ஜப்பானியரால் எந்த இடத்தையும் பிடித்து அடக்கி ஆள முடியாது என்பது தெரிந்துவிட்டது. நகரமும், கிராமமும், அடிக்கடி கைமாறிக்கொண்டே உள்ளன. சீனர்களைச் சிறைபிடித்து, ஜப்பானில் டெகிழக்குப்பகுதியிலே வேலை செய்யும்படி வற்புறுத்துகின்றனர். 50 இலட்சம் சீனர்கள் இங்ஙனம் அடிமைவாழ்வு வாழ்கின்றனர். ஜப்பானியரிடம் சிக்கிய நாடுகளிலே, சொத்து சூறையாடப்பட்டு, மாதர்கற்பழிக்கப்பட்டு மக்கள் அடிமைகளாக்கப்பட்டுவிட்டனர். ஹார்வார்டு கலாசாலையில் படித்த மிஸ்டர் கிளார்க் ஷாரகாமா என்பவர் வாஷிங்டன் போஸ்ட்பத்திரிகையிலே இது பற்றி விளக்கமாக எழுதியுள்ளார்.

## வருஷம் மாறிவிட்டது!

ஜப்பானிடம் பிடிபட்ட நாடுகளிலே காலண்டர் கூட மாற்றிவிட்டார்களாம்! சிங்கப்பூருக்கு ஷோனன் என்று பெயரிட்டுவிட்டனரே, அதுபோல 1942-ம் ஆண்டு என்பதை **2602-ம்** ஆண்டு என்று மாற்றிவிட்டனர். ஜப்பானில் முடி அரசு துவக்கி 2602 ஆண்டு ஆகிறதாம். ஊரின் பெயரும், நாளும்கிழமையும் மாறினதுபோலவே மக்களின் வாழ்வும் மாறிவிட்டது. பஞ்சம் பிணி தாண்டவமாடுகின்றன.

## பண வெள்ளம்!

ஜெர்மன் ஜப்பான் ஆகிய நாடுகளின் கொட்டத்தை அடக்க அமெரிக்கா பணத்தை வாரி வாரி வீசுகிறது. ரஷியா இரத்தத்தை ஆறென ஓடவிடுகிறது. சீனா பிணத்தைக் குவிக்கிறது, பிரிட்டன் இரத்தம் வியர்வை கண்ணீர் கலந்த வீரவெள்ளத்தை உண்டாக்குகிறது.

7ம் பக்கம் பார்க்க.

2-ம்பக்கத் தொடர்ச்சி. (அந்தராத்மாவே)

விட்டார், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே பார்த்துப்பிழை கபர்தார்! என்று கூறுகின்றன. 1920ம் ஆண்டு நடைபெற்றது போன்ற பெரிய போராட்டமாம்! காந்தியாரின் தலைமையாம்! கடைசிப் போராம்! காந்தியார் தமது கடைசி சக்தியை இதற்காகவே சேமித்து வைத்திருக்கிறாராம். அவரது பேச்சும் எழுத்தும் காரசாரமாகிக் கொண்டே வருகின்றனவாம். வருகிறது புலி! என்று வரட்டுக் கூச்சலைக் கிளப்பிவிட்டன, வகையறியாத கூட்டம்! நான், காந்தியாரின் திட்டத்தைக் கண்டித்தது கண்ட ஒரு கதர்ச்சட்டைக்கு கண்களிலே மிரட்சியும், கைகால்களிலே துடிப்பும், நெஞ்சிலே சோகமும் ஏற்பட்டுவிட்டது. புரட்சி ஓங்குக! ஏகாதிபத்தியம் ஒழிக! என்று கூவி விட்டு, ஸ்ரீஜத் என்ற அடைமொழியை எனக்களித்துக் கடிதம் தீட்டிவிட்டது ஒரு காங்கிரஸ் கபந்தம். புரட்சி என் ஓங்கும், ஸ்ரீஜத் என்ற வடமொழியிலே மோகம்இருக்கும்போது? புரட்சி ஓங்குக என்ற கருத்துக்கும் இந்த ஸ்ரீஜத் என்ற ஆரியஅடைமொழிக்கும் பொருந்துமா என்றுகேட்கிறேன். கூட்டிலேசிக்கி, கோவைக் கனி தின்று, சொன்னதைச் சொல்லும் கிளிபோல், புரட்சி ஓங்குக என்று யாரோ சொன்னதை உருப்போட்டு, வாந்தி எடுக்கும் காந்தி பக்தரே உம்மைத் தான் கேட்கிறேன், உள்ளத்திலே உறுத்தினால் பதற வேண்டாம், ஜாதிமத பேதமெனும் பித்துப்பிள்ளை விளையாட்டை ஒழித்து கண்மூடி வழக்கமெலாம் மண் மூடிப் போகும்படி செய்து நாட்டிலே மக்களின் உரிமைகளை நர்த்தனமேடையாக்கிக் கொண்டு ஆணவ ஆட்டமாடும் கூட்டத்தின் கொட்டத்தை அடக்கி, சமத்துவம் நிலவும் சமுதாயத்தை நிறுவுவது, புரட்சி அல்லவா? அந்தப் புரட்சி ஓங்குக என்று எங்கே சொல்லு பார்ப்போம். பழங்குடி மக்களை ஆரியம் என்ற பல்லக்குத் தூக்குபவராக்கி, அமர்ந்து பார்ப்பனர், மதம் என்ற சாட்டைகொண்டு மக்களின் மனம் பதறத்தாக்குவதை மாற்றுவது, மாய்ப்பது, மாபெரும் புரட்சி அல்லவா? அமெரிக்காவிலே அடிமை வியாபாரத்தை அடக்கினார், ஆபிரகாம்லின்கன். இது ஓர் புரட்சி! இங்குள்ள பார்ப்பனரின் பாதந்தாங்கிகளாகத் தமிழர் இன்றும் இருப்பதை மாற்றி, ஆரிய ஆதிக்கத்தை அழித்தொழிப்பது, புரட்சி அல்லவா! அதைவிட மிக்க அவசியமான வேறோர் புரட்சி இருக்கிறதா, என்று கூறுங்கள் கேட்போம். கோபம் வந்து விடுகிறது. ஆவேசமாடுகிறாய் தோழனே! ஆனால் இதைப் படித்துப்பார்!

ரோம் தீப்பற்றி எரியும்போது பிடில் வாசித்துக் கொண்டிருந்த நீரோவுக்கும் உங்கட்கும் என்ன வித்தியாசம்? தாங்கள் தீயை மூட்டிவிட்டு, அதை அணைக்கும் ஆற்றலுமற்று தீ கொழுந்துவிட்டெரியும் போது சேவாகிராமத்திலே உல்லாசமாக வாழுகிறீரே? இது தர்மமா? நீதியா? என்று ஒரு நிருபர், காந்தியாரைக் கண்டித்துக் கடிதம் விட, சாந்த சொரூபிக்கு கோபம் சண்டமாருதம்போல் கிளம்பி, "என்னையா" நீரோவுடன் ஒப்பிடுகிறீர்! நான் என்னையே தீயில் சுட்டெரித்துக் கொள்ளப் போகிறேன் தெரியுமா! என்று காந்தியார் கடுமையான பதில் எழுதியிருக்கிறார்.

தன்னைத்தானே சுட்டுத் தள்ளிக்கொள்ளப் போவதாகக் காந்தியார் பேசுவதும் எழுதுவதும் ஒருவிதமான ஹம்பக்! உப்பு சத்தியாக்கிரகத்தின்போது கூறினாரே "என் பிணம் அரபிக் கடலிலே மிதக்கும்" என்று அதைப்போல் இது ஓர் ஹம்பக்! இதையார் நம்பி, கண்களைத் துடைத்துக் கொள்ள கால்கஜம் துணி தேடப்போகிறார்கள்! கனல் கக்கும் காந்தியார் விரைவில் புனல் தொட்டியாவார் என்பது மக்களுக்குத் தெரியும்.

பொருளற்ற அவரது பாட்டுக்களைச் சிலர் புத்தமுது என்றனர், கைத் தாளமிட்டனர், இருளுக்குள் ஒளி காண, தீயில் குளிர்ச்சிக்காண எண்ணினர். அந்தக் கூட்டத்தின் தலைமை தாங்கி நடத்திச்சென்றவரே ஆச்சாரியார், எனவே அவர் இன்று அதே காந்தியாரின் திட்டங்களைக் கண்டிக்க முன்வர இலச்சைப்படுவார், பாவம். நீரோவுக்கும் உனக்கும் என்னய்யா வித்தியாசம்? என்று கேட்க ஆட்கள் கிளம்பி விட்டது கண்டு கடுங்கோபம் கொண்ட காந்தியார், "என்னை இப்படிக் கூறுவதா! என்று கூறுகிறார். வேண்டாம், வேண்டாம், என்று நாட்டிலே உள்ளோர் வேண்டிக் கேட்டுக் கொள்வார் என்ற எண்ணம்போலும்! நிருபர் கேட்ட கேள்விக்கு நேரடியான ஒழுங்கான தக்க பதிலைக்கூற முடியாது தவித்து பள்ளிப்பிள்ளை கன்னா பின்னாவென்று கதறுவதுபோலன்றோ காந்தியார் பதில்கூறி இருக்கிறார். நீரோபோல, காந்தியார் இன்று இல்லைஎன்று கூறமுடியுமா? அழிந்த நகரங்கள், காடான கிராமங்கள், கட்டாந்தரையான நிலங்கள், உடைந்த பாலங்கள், உயிரை இழந்த வீரர்கள், வீரச்சீனாவின் காட்சி இது. இரத்த ஆறு! பிணக்குவியல்! நொறுங்கிய டாங்கிகள் தூளான மோட்டார் சிதறிக்கீழே செங்குருதிச்சேற்றில் புதைந்துள்ள தலைகள், குடல்கள், கை, கால், முதலிய உறுப்புகள்! இது வீர ரஷியாவிலே காட்சி! இத்தகைய கோரமும் கொடுமையும் தாண்டவமாடக் காரணமாக உள்ள அச்சு நாட்டிடம் கைக்கூலி வாங்கினவன், கடையன், மடையன், நெஞ்சிலே சூது எண்ணங்கொண்ட சடையன், சொல்லக் கூசும் சொற்களை காந்தியார் கூறுவதைக்கேட்டு அவரை நீரோ என்று யார், அழைக்காமலிருக்க முடியும்! எவ்வளவு பயங்கரமான நாட்கள்! எத்தகைய ஆபத்து சூழ்ந்திருக்கிறது! இந்த நேரத்திலே உள் நாட்டுக் குழப்பத்தை செய்யத் தூண்டுபவர் யாராயிருந்தாலும், மகாத்மாவாக இருந்தாலும் மகரிஷியாக இருப்பினும் மகந்து மடாதிபதியாக இருப்பினும் அவர்களை, மட்டந்தட்டி, மூலையில் உட்காரவைத்தாலன்றி, நாட்டைக்காப்பாற்ற முடியுமா என்று கேட்கிறேன்.

இரத்தத்தைத் தண்ணீர்போல் இறைத்து பணத்தை மண்போல்வாரி வீசி, பிரிட்டன் தனது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளத் துணிகிறதே என்று அங்கலாய்த்துக்கொள்ளும் காந்தியார், இந்த நாட்டிற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தடுக்க மடத்தனத்தையா கேடயமாக உபயோகிப்பது என்று கேட்கிறேன். இந்தச்சமயத்திலே உள்நாட்டுக் கிளர்ச்சியைத் துவக்கினால், அது தீ மூட்டுவதாகும், அடக்கமுடியாத, மூட்டியவராலேயே அடக்கமுடியாத தீயைக் கிளப்பியதாக முடியும். இத்தகைய தீயை மூட்டிவிட்டு, வார்தாவிலே உல்லாசமாக வாழ எண்ணுகிறீரே வயோதிகரே, உமக்கும் நீரோவுக்கும் என்ன வித்தியாசம் என்று யாரோ ஒருநிருபர் கேட்டதிலே என்ன குற்றம் கூறுங்கள் பார்ப்போம். நீரோவைச் சரிதம் சூடுகோலிட்டுக் காட்டுவதுபோலவே, காந்தியாரின் கதியுமாகும். ஆனால் அதனைச்செய்ய ஆச்சாரியார் முன் வரமாட்டார், அவருக்குத்தான் ஆசை இன்னமும் அங்கே இருக்கிறதே!

காந்தியாரின் கபோதித்திட்டத்திற்கு ஜனாப் ஜின்னா சரியான சவுக்கடி கொடுத்திருக்கிறார். என்னென்பது அந்த எஃகு உள்ளம்படைத்தவரின் ஆண்மையை! பிரிட்டிஷாரே வெளியே போ! என்று காந்தியார் கூறும் திட்டம், பிரிட்டனை மிரட்டிப் பணிய வைத்து, இந்துராஜ்யம் ஏற்படுத்தச் செய்யும் சூழ்ச்சியே என்பதை ஜனாப் ஜின்னா, இவ்வாரம் வெளியிட்டுள்ள அறிக்கையிலே தெளிவாகக் காட்டியுள்ளார். பிரிட்டிஷார் தாமாகவே இப்போது நாட்டைவிட்டு விலகிவிடவேண்டுமாம். இல்லையேல், காந்தியார் தமது கிளர்ச்சியைத் துவக்குவாராம். இந்த மிரட்டலைக் கேட்டுப் பிரிட்டன் பணியுமென்று கருதுவது, குதிரைக் கொம்புக்குத் தவங்கிடப்பதாகவே முடியும்.

சரி காந்தியாரே, இப்போது பிரிட்டிஷார், இந்தியாவைவிட்டுப் போய்விட்டால், நாட்டு ஆட்சி, யாரிடம்

இருக்கும்? என்றகேள்விக்கு, காந்தியார்கூறும் பதிலைக் கேளுங்கள்.

யாரிடமேனும் இருக்கட்டும். "யாரால், எங்கெங்கே, அதிகாரத்தை ஏற்படுத்திக்கொள்ள முடிகிறதோ, அவ்விதமே நடக்கட்டும்.

முஸ்லீம்கள் பாகிஸ்தானமும், இந்துக்கள் இந்துஸ்தானமும், சீக்கியர்கள் சீக்கிஸ்தானமும் அமைத்துக்கொள்ளட்டும். எதுவோ நடக்கட்டும், எப்படியோ, ஆகட்டும், பிரிட்டிஷார் போய்விடட்டும், என்று கூறுகிறார். இதுபொறுப்பு, நாட்டுப்பற்று தன்னம்பிக்கை, மனிதாபிமானம், சாந்தி, அமைதி, ஆகிய ஏதாவதோர் நற்குணத்தைக் காட்டுகிறதா என்று கேட்கிறேன், கலகம், குழப்பம், கொலை, குத்து வெட்டு, சண்டை சச்சரவு, தீமூட்டுதல், தெருச்சண்டை, காட்டுராஜாக்கள் கிளம்புவது ஆகிய இத்தனையும் நடந்தாலும், பரவாயில்லை என்று கூறும் ஒருவரை, பித்தரென்பதா, பேதையரென்பதா, 'சகலரையும்' எய்க்கும் சித்தரென மனப்பால் குடிக்கும் மத்தரென்பதா, என்னவென்று கூறுவது? நாட்டிலே இன்றுள்ள கட்டும் காவலும் குலைந்து, சட்டமும் சாந்தியும் சரிந்து, இரத்தம் ஆறென ஓடி, பாகிஸ்தான், இந்துஸ்தான் ஆகிய எந்தஸ்தானமேனும் ஏற்படட்டும், என்று கூறும் நெஞ்சிரக்கமற்றவர், குழப்பமின்றி, உள்நாட்டுக் கலகமின்றி, கத்தியின்றி புத்தியை உபயோகித்து பாகிஸ்தானை ஒப்புக்கொண்டு உள்நாட்டுக் குழப்பம் ஏற்படுவதையும் தடுத்து, வெளிபகையும் விரட்ட, அறிவும் ஆண்மையும் புடைசூழ பவனிவரக்கூடாதா! வார்தாவின் விபரீத விஷவாடை, நாட்டைப்பாழாக்கத் துணிவுகொள்ளும் கொடுமையைக் காணீர்! ஜனாப் ஜின்னா இதனைக்கண்டித்து "ஐயா காந்தியாரே! உமது வயது முதிர்ந்த இந்தப்பருவத்திலே நீர் நாட்டுக்குச் செய்யும் நற்காரியம் இதுதானா?" என்றுகேட்கிறார். நாக்கைப்பிடுங்கிக்கொள்வர் மற்ற ஆத்மாக்கள், இந்தச் சுடு சொல்கேட்டு, வெட்கி! ஆனால் அவர் மகாத்மா வல்லவா, வெட்கமும் மானமும், ரோஷமும்வார்தாவை அண்டுவதில்லை!!

"பாகிஸ்தான் என்றால் என்னவென்றே எனக்கு விளங்கவில்லை. பாகிஸ்தானிகள் எனக்கு விளக்கம் கூறி, திருப்திசெய்யட்டுமே, என்று கேட்கும் காந்தியாருக்கு ஜனாப்ஜின்னா, சுடச்சுடத்தருகிறார் சாட்டை!

"ஐயா மகாத்மாவே! முஸ்லீம்களின் கோரிக்கை நியாயமானது என்று எடுத்துச்சொல்லி உம்மைத் திருப்திசெய்வதில் யாராலும் வெற்றிபெற முடியாது போல் தோன்றுகிறது. ஒருவேளை அந்தராத்மா வேண்டுமானால் அதைச்செய்யக்கூடும்" என்று ஜனாப்ஜின்னா கூறுகிறார். வெட்கம் பிறக்கவேண்டாமா, வேதியக் கூட்டத்துக்கு வெண்சாமரம் வீசும் வார்தா வாசிக்கு!

பிரிட்டிஷாரை நம்பி அவர்களின் உதவியைக் கொண்டுதானா, நீங்கள் பாகிஸ்தான் பெறப்போகிறீர்கள்? என்றுகேட்டு, கிண்டல்செய்யும் காந்தியாருக்கு, ஜனாப்ஜின்னா, தெளிவும் தீரமும் தொனிக்க, உறுதியும் உணர்ச்சியும் ததும்ப, நம்பிக்கையும் ஆண்மையும் பொங்க, அழகிய, பதில் கூறுகிறார். பொன்தகட்டிலே வைரத்தால் இழைக்கப்படவேண்டிய வாசகமென்பேன் அதனை. பத்துகோடி முஸ்லீம்களின் இருதய கீதமென்பேன்! ஆயிரமாண்டுகள் இருந்த இஸ்லாமிய அரசசரிதக்கீர்த்தியின் பட்டயமென்பேன், அந்தப்பேச்சை. பாருங்கள் அதன் அருமையை!

**"பிரிட்டிஷாரின் உதவியின் பேரிலோ, அல்லது அவர்களது பாதுகாப்பின் கீழோ, எங்களுக்குப் பாகிஸ்தானில் நம்பிக்கையில்லை. இந்திய முஸ்லீம்களின் நம்பிக்கைதான் பாகிஸ்தான். நாங்கள் இதை அடைய யாரையும் எதிர்பார்த்திருக்கவில்லை எங்களையே நம்பியிருக்கிறோம். இதற்கு இடையூறாக எதிர்ப்பும் இடைஞ்சலும் எங்கிருந்து வந்தாலும் அதைச் சமாளிக்கவும் விருப்பத்துடனிருக்கிறோம்.**

வார்தா, லண்டன், வாஷிங்டன், எங்கு இருந்து எதிர்ப்பும் இடைஞ்சலும் வரினும், ஒருகை பார்க்கத் தயார்! எங்களின் இலட்சியம் பாகிஸ்தான் அதைப் பெற நாங்கள் எங்களையே நம்பியிருக்கிறோம், எனும் இந்த மொழிகள், கோழைகளையும் வீரராக்கும்! இனத்தின் எழுச்சியைக்கண்டு, இனத்தின் நம்பிக்கையைப் பெற்று, இலட்சிய பூர்த்திக்காக எத்தகைய இடையூறு வரினும்சரி என்றுள்ள உறுதிகொண்ட உத்தம வீரர்கள் மட்டுமே இத்தகைய உயிர் வாசகத்தை உரைக்கமுடியும்!

அந்தராத்மாவே! அடிக்கடி காந்தியாரை நீ ஏமாற்றி வருகிறாய். ராஜ்கோட்சம்பவத்தின் போது உன்னை நம்பிய "மகாத்மா" ரசாபாசத்தில் சிக்கிக்கொண்டு தவித்தார். ஆனால் இன்னமும் உன்னைத்தான் அவர் நம்புகிறாராம். தன்நிலை, நாட்டுநிலை முதலியன தெரியாது "உப்புக்காய்ச்சுவோம் ஊராள்வோம்" என்று உளுத்துப்போன பேச்சுப்பேசும்உன் மகாத்மாவுக்கு நீயாவது கூறு, "இனி பலிக்காது, கடையைக் கட்டிவிடுவதே சிலாக்கியம்" என்று. நாட்டிலே தோன்றியுள்ள இனஎழுச்சியை இனி அடக்கி ஆளமுடியாது என்பதை எடுத்துக்கூறு. அந்த இன எழுச்சி காரணமாகத்தான் கோட்டைகளின் சுவற்றின்மீது மண்டைகள் மோத நேரிடினும், உடலம் கழுகுக்கும் நரிக்கும் இரையானாலும், கவலையில்லை என்று வீரர்கள் வேலைசெய்தனர் என்பதை எடுத்துச்சொல்லு. ஏன் முஸ்லீம்களுடன் வீண் மல்லு? காந்தியாரின் உள்ளத்திலே குடிபுகுந்துள்ள கபடத்தைத் தயவு செய்து கொல்லு! அவரைச்சூழ்ந்துள்ள மார்வார் குஜராத் முதலாளிகளைப் பிடரியைப் பிடித்துத்தள்ளு! நாட்டுக்கு நற்காலம் பிறக்கட்டும் என்று பாடு, பள்ளு! விடிந்தது என்றெழுந்து துள்ளு!!

ஆச்சாரியார், மஞ்சள் கருப்பாச்சுதே என்று மாரடித்துக்கொண்டு இருக்கிறார், எனவே அந்தராத்மாவே, நீயேனும் சற்று தெளிவுபடுத்து, காந்தியாருக்கு. விஷயத்தைக்கூறு! இதைச் செய்யாமற்போனால் நாட்டு மக்களின் சக்தி கிளம்பி, உன்மகாத்மாவை வெகுபாடுபடுத்திவிடும், என்பதை நான் முன்கூட்டியே எச்சரித்து விடுகிறேன், கேட்டாலும் சரி, விட்டாலும் சரி, நாட்டு நிலைமையை நான் எடுத்துக்காட்டி விட்டேன், நடப்பன நடக்கட்டும் நான் என்னசெய்வது!

## ஆச்சாரியாருக்குப் பதவி?

சென்னை மாகாணத்துக்கு விரைவில் ஆலோசனையாளர்கள், பல கட்சிகளிலிருந்தும் தெரிந்தெடுக்கப் படுவரென்றும், தேசியக்கட்சியின் சார்பாக, தோழர் ராஜகோபாலாச்சாரியாருக்குச் "சான்ஸ்" கிடைக்குமென்றும், வதந்தி உலவுகிறது.

Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A at 51, Nimanthakara Street, L. Conjeeveram.